பக்கங்கள்: 09

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 10 வள்ளுவர் ஆண்டு 2056 கார்த்திகை 27 சனிக்கிழமை 13.12.2025 கதிர் 035

## இது ரகசியம் அல்ல!

2015ஆம் ஆண்டு முதல் 2019 வரைபிரதமராகஇருந்தவரானரணில் விக்கிரமசிங்க 2019 அரசுத் தலைவர் தேர்தலில் படுதோல்வியடைந்தார். மட்டுமல்ல அடுத்து வந்த ☞ 2

### விபத்தை ஏற்படுத்திய குற்றச்சாட்டில்

# ஆளும்தரப்பின் முக்கிய எம்.பி. கைதாகிப் பிணையில் விடுவிப்பு

கவனயீனமாக வாகனத்தைச் செலுத்தி 6 மாத பச்சிளம் குழந்தை உட்பட 3 பேரை காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட முன்னாள் சபாநாயகரும் ஆளும் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினருமான அசோக் ரன்வலவை பிணையில் செல்வதற்கு மாளிகாகந்த நீதவான் நீதிமன்றம் நேற்று அனுமதி அளித்துள்ளது.

சந்தேகநபரான அசோக் ரன்வலவுக்கு தலா 2 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் செல்வதற்கு நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

சபுகஸ்கந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாவரமண்டிய தெனிமுல்ல பகுதியில் புதன்கிழமை இரவு 7.45 மணியளவில் முன்னாள் சபாநாயகரும் நாடாளுமன்ற உறுப்பினருமான அசோக ரன்வல பயணித்த ஜீப் வண்டி விபத்துக்குள்ளானது.

குறித்த ஜீப் வண்டி சென்ற அதே திசையில் முன்னாள் பயணித்துக் கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் ஒன்றின் பின்புறம் மோதி எதிர் திசையிலிருந்து வந்த காருடனும் மோதி ஜீப் விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்துச் சம்பவத்தில் காரில் பயணித்த 6 மாதங்கள் பூர்த்தியான பச்சிளம் குழந்தை, குழந்தையின் தாய் (25) மற்றும் பாட்டி(55) ஆகிய மூவரும் காயமடைந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். ☞ 2

# பெலியத்த பிரதேச சபைத் தலைவர் ஊழல் குற்றச்சாட்டில் நேற்று கைது

பதவியிலிருந்த காலப்பகுதியில் 36 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதி மிக்க சொத்துகளை சட்டவிரோதமாக ஈட்டியமை தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழுவால் கைது செய்யப்பட்ட பெலியத்த பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சிறில் முனசிங்கவை டிசெம்பர் 22 வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பெலியத்த பிரதேசசபையின் முன்னாள் தவிசாளராக 2012இல் பதவி வகித்த சிறில் முனசிங்க சட்டவிரோதமாக ஈட்டினார் எனச் சந்தேகிக்கப்படும் 36 கோடி ரூபாவுக்கும் அதிக பெறுமதி மிக்க சொத்து மற்றும் உடமைகள் தொடர்பில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு விசாரணைகளை முன்னெடுத்திருந்தது.

இந்த விசாரணைகளின்அடுத்த கட்டமாக வருமானத்திற்கு மீறிய சொத்துக் குவிப்பு என்ற வகையில் பெலியத்த பிரதேசசபையின் முன்னாள் தவிசாளர் நேற்றுக் கைது செய்யப்பட்டிருந்தார். கொழும்பு நீதிவான் மன்றத்தில் நிறுத்தப்பட்டபோது மேலதிக நீதிவான் லியான் வர்ஷவிதான வழக்கை விசாரித்தார்.

இருதரப்பு வாதங்களையும் பரிசீலனை செய்த நீதிவான் சந்தேகநபரான சிறில் முனசிங்கவை டிசெம்பர் 22வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவு பிறப்பித்திருந்தார்.

# காணாமற்போன 193 பேரும் இறந்தவர்களாக அறிவிப்பு

'தித்வா' புயல் காரணமாக ஏற்பட்ட மண்சரிவுமற்றும்வெள்ளப்பெருக்கினால் காணாமல்போன193நபர்களின்இறப்புப் பதிவுச் சான்றிதழ்களை விநியோகிக்க பதிவாளர் நாயகம் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

டிசெம்பர் 2 ஆளும்தரப்பினால் வெளியிடப்பட்ட விசேட வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைய, அவசர இடர் நிலைமைகாரணமாககாணாமல்போன ஒருவரைப் பற்றி 2 வாரங்களுக்குப் பின்னரும் தகவல் கிடைக்கவில்லை என்றால், அவருக்கு இறப்புப் பதிவுச் சான்றிதழ் வழங்கப்படுமமென பதிவாளர் நாயகம் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அதற்கமைய,இந்தப்பேரிடர்நிலைமை காரணமாக இதுவரை காணாமல் போயுள்ள 203 நபர்களுக்காக ஆளும்தரப்பின் வழங்கப்படும் நட்டஈட்டுப் பணத்தை விரைவில் பெற்றுக்கொள்ளும் நோக்கில், இந்தச் சான்றிதழ்களை வழங்க அந்தத் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

அதற்கான தேவையான சட்ட ஏற்பாடுகள் ஏற்கனவே நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளதாகவும்,இந்த பேரிடர் காரணமாக நபர் ஒருவர், உறவினர் அல்லது நண்பர் காணாமல் போயுள்ளார் என்பதை உரிய பிரதேச கிராம உத்தியோகத்தர் உறுதிப்படுத்தினால், அந்த மாவட்ட பிரதிப் பதிவாளருக்கு இறப்புப் பதிவுச் சான்றிதழ்களை வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

பேரிடருக்குஉள்ளாகிகாணாமல்போன நபர் தொடர்பில் ஆட்சேபனைகள் ☞ 2

# மதுபான அனுமதிப்பத்திர கட்டணம் திடீர் அதிகரிப்பு

### 100 சதவீதம் எகிறியது

சகல மதுபான அனுமதிப்பத்திரங்களுக்கான கட்டணம் நேற்று முதல் (12) உடன் அமுலுக்கு வரும் வகையில் 100 சதவீதத்தால் அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டள்ளது.

அரசுத் தலைவர் அநுரகுமாரவினால் டிசெம்பர் 5 நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட யோசனைக்கு அமைவாகஅனுமதிப்பத்திரகட்டணம்அதிகரிக்கப்பட்டுள்ளது.

கட்டண அதிகரிப்பு தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் நிதியமைச்சரான அரசுத் தலைவர் அநுரகுமாரவின் கையொப்பத்துடன் அரசுத் தலைவரின் செயலாளரினால் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய வருடாந்த மதுவரி கட்டணம், தொழிற்சாலைக்காக ஒரே தடவையில் அறவிடப்படும் கட்டணம் மற்றும் காப்புறுதி ஈட்டு வைப்பு கட்டணம் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த புதிய கட்டண திருத்தத்துக்கு அமைய 2026.01.01 முதல் புதிய கட்டணங்களை செலுத்த வேண்டும் என்று மதுவரித் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

புதிய கட்டண திருத்தத்தால் மதுபானங்களின் விலை அதிகரிக்கக்கூடும் என இலங்கை மதுபான உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

# 'தித்வா' உயிரிழப்புக்கள் 640 வரையும் அதிகரிப்பு

'தித்வா' புயலால் ஏற்பட்ட பேரிடர்களால் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை நேற்று மாலை வரையான தரவுகளின் பிரகாரம் 640 ஆக உயர்வடைந்துள்ளதோடு 211 பேர் காணாமல் போயுள்ளனர்.

அத்தோடு 473 ,138 குடும்பங்களைச் சேர்ந்த 1, 637, 960 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 26, 103 குடும்பங்களைச் சேர்ந்த 82 ,813 பேர் தொடர்ந்தும் 847 இடைத்தங்கல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் அதிகளவான ☞ 2

# இழப்பீடுகளை வழங்குவதற்கு நிபந்தனை விதிக்கிறார் அநுர

### அது கீழ்த்தரமான வேலை என்கிறது ஐ.ம.சக்தி

அரசுத் தலைவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்த பிரகாரம் பேரிடரில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டுத் தொகையை வழங்க வேண்டும் என்றே நாங்கள்ஆளும்தரப்பைவற்புறுத்திவருகிறோம். ஆனால் அரசுத் தலைவர் தற்போது மாவட்ட அபிவிருத்திக் கூட்டங்களுக்குச் ☞ 2

# எச்சரிக்கை விடுக்கப்பட்டால் உடன் ஏற்றுச் செயற்படுங்கள்

### இடர் முகாமைத்துவப் பணிப்பாளர் வேண்டுகோள்

இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டால் அதற்கேற்ப செயற்பட வேண்டியதுஅத்தியாவசியமானதாகும். எச்சரிக்கை விடுக்கப்படும் இடங்களிலிருந்து பொருத்தமான நேரத்தில் வெளியேறுவதன் ஊடாக மாத்திரமே உயிரிழப்புக்களை தவிர்த்துக் கொள்ள முடியும் என இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளரும் ஊடகப்பேச்சாளருமான பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார். ☞ 2

# இவ்வளவு கீழ்த்தரமாக எதிர்க்கட்சியினர் செயற்படுவரென எதிர்பார்க்கவில்லை

### அமைச்சர் பிமல் ரத்நாயக்க கொந்தளிப்பு

இயற்கைப் பேரிடரால் பொதுமக்கள் நெருக்கடிக் குள்ளாகியுள்ளதைகாட்டிலும்எதிர்க்கட்சியினரேஅதிகம் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். எதிர்க்கட்சியினர் இந்தளவுக்கு கீழ்த்தரமாக செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. இவர்களின் நிலைமையையிட்டு கவலையடைகிறோமென போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

இயற்கைப் பேரிடர்களால் சேதமடைந்துள்ள நாவலபிட்டி -நுவரெலியா தொடருந்துப் பாதை சீரமைப்புப் பணிகளை நேற்று பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசியபோது இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் நிலவிய சீரற்ற காலநிலையை ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நாடாளுமன்றத் தேர்தலில் அவரது ஐக்கிய தேசியக் கட்சியும் படுதோல்வியடைந்தது. அந்தக் கட்சிக்கு தேசியப் பட்டியல் மூலமாக ஒரேயொரு ஆசனம் மட்டுமே கிடைத்தது. அதற்குரியவரை நியமிக்காமல் சுமார் 10 மாதங்கள் இழுத்தடித்த பின்னர் தானே அந்த இடத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினராகிய ரணில் விக்கிரமசிங்க, அரகலய மக்கள் எழுச்சியைத் தனக்குச் சாதகமாக்கிக்கொண்டு அரசுத் தலைவர் பதவியைப் பிடித்தார் என்பது வரலாறு.

அரசுத் தலைவராகியதும் தன்னை அந்தப் பதவியில் அமரவைத்த பொது ஜன பெரமுனவிற்குள்ளேயேபிளவுகளைஏற்படுத்தி, ராஜபக்சக்களிடமிருந்து அவர்களைப் பிரித்து அடுத்து ஒரு அரசியல் ஓட்டத்திற்கு அவர் கடுமையாக முயற்சி செய்தார். ஆனால் அந்த முயற்சியும் வெற்றியளிக்கவில்லை. இருந்தாலும் 2020 நாடாளுமன்றத் தேர்தல் போலன்றி, 2024 நாடாளுமன்றத் தேர்தலில் அவர் தலைமையிலான சிலிண்டர் கட்சியான தேசிய ஜனநாயக முன்னணிக்கு (ஹிம்ய்) 5 ஆசனங்கள் கிடைத்தன. அவற்றில் 3 ஆசனங்களை அவர்கள் தேர்தல் வெற்றி மூலம் பெற்றார்கள். பதுளை, களுத்துறை, கண்டி ஆகிய மாவட்டங்களில் இருந்து அந்த ஆசனங்கள்கிடைத்தன. இரண்டுஆசனங்கள் தேசியப்பட்டியல்மூலம்கிடைத்தன. அவற்றில் ஒன்றைபைசர்முஸ்தபாவுக்குவழங்கினார்கள். மற்றொன்றை ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் அமைச்சரும் தேசிய ஜனநாயக முன்னணியின் செயலாளருமான ரவி கருணாநாயக்க தனதாக்கிக் கொண்டார். கிடைத்த இரு தேசியப்பட்டியல் ஆசனங்களில் ஒன்றை பைசர் முஸ்தபாவை நியமிப்பதற்கு கூட்டணியினர் இணங்கினர் என்றபோது மற்றைய ஒரு ஆசனத்தைப் பெறுவதற்கு கூட்டணிக்குள்கடுமையானபோட்டிநிலவியது. இதனால் முன்னணியின் செயலாளர் என்ற அதிகாரத்தைப் பயன்படுத்தி ரவி தனது பெயரையே முன்மொழிந்து நாடாளுமன்ற உறுப்பினராகினார்.

இந்த நிலையில், ரணில் விக்கிரமசிங்க மீண்டும்நாடாளுமன்றத்திற்கு வருவதற்கான ஆயத்தங்களைத் தொடங்கிவிட்டார் என்று கொழும்பு அரசியல் வட்டாரங்களில் செய்திகள் அடிபடத் தொடங்கியிருக்கின்றன. அடுத்த வருடத்தில் நாடாளுமன்றத்திற்குப் புகும் எண்ணத்தில் அவர் இருக்கின்றார் என்கிறார்கள்.

2020ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வியடைந்த பின்னர் 10 மாதங்கள் கழித்து நாடாளுமன்ற உறுப்பினராகியதைப் போலவே, இப்போது ஒரு வருடம் கடந்துவிட்ட நிலையில் மீண்டும் நாடாளுமன்ற உறுப்பினராகும் முயற்சியில் இறங்கியிருக்கிறார். 2024 செப்டெம்பரில் நடந்த அரசுத் தலைவர் தேர்தலில் படுதோல்வியடைந்ததைத் தொடர்ந்து அரசியல் செயற்பாடுகளில் இருந்து சற்று ஒதுங்கியிருந்தார். எனினும், ஊழல் குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பின்னர் மீண்டும் தீவிர அரசியலில் களமிறங்கினார். தனது கைதையொட்டி எதிர்க் கட்சிகள் மத்தியில் எழுந்த அரசியல் ஒன்றிணைவைச் சாதகமாக்கிக்கொண்டு மீண்டும் ஐக்கிய தேசியக் கட்சியைத் தலையெடுக்க வைக்கும் முயற்சியில் இறங்கினார். ஆனால் சஜித் பிரேமதாசவின் நடவடிக்கைகளால் அது கைகூடவில்லை. அதனால் பொதுஜன பெரமுனவின் நாமல் ராஜபக்சவுடன் கூட்டுச் சேர்ந்து எதிர்ப்பு அரசியலில் ஈடுபட முயன்றார். அதிலும் நாமலின் பெயரும் புகழுமே உயருகின்றது என்கிற நிலையில், நாடாளுமன்றத்திற்குள் மீண்டும் நுழைவதற்கான நகர்வுகளைத் தொடங்கியிருக்கிறார்.

வரும் ஆண்டுகளில் தேசிய மக்கள் சக்தி ஆளும்தரப்பு பெரும் பொருளாதார நெருக்கடிகளை எதிர்கொள்ளும் என்று எதிர்பார்க்கும் ரணில் விக்கிரமசிங்க 2022 போன்றே தனக்கு மீண்டும் அரசுத் தலைவராகும் வாய்ப்புக் கிடைக்கக்கூடும் என்று எதிர்பார்க்கின்றார் போலும்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## காணாமற்போன....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எழவில்லைஎன்றால்,பிரதேசசெயலாளரினால் அங்கீகாரத்துக்காக அனுப்பப்படும் விண்ணப்பத்தை, பதிவாளர் நாயகத்தினால் அதிகாரம்அளிக்கப்பட்டபிராந்தியபிரதிஅல்லது உதவிப் பதிவாளர் நாயகம் அங்கீகரிப்பார்.

இதேவேளை, மத்திய மாகாண மக்களுக்காக இறப்புச் சான்றிதழ் விநியோகித்தல், காணாமல் போனவர்களின் இறப்புச்சான்றிதழ் விநியோகித்தல் உள்ளிட்ட சேவைகளை வழங்கும் விசேட நடமாடும் சேவையொன்று இன்றும் நாளையும் முன்னெடுக்கப்படவுள்ளது.

குறித்தசேவைகள்அனைத்தையும்அந்தச் சந்தர்ப்பத்திலேயேஇலவசமாகவழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண பிரதிப் பதிவாளர் நாயகம் தரங்க சுபாஷினி தெரிவித்தார்.

சேதமடைந்த திருமண, பிறப்பு மற்றும் இறப்புச் சான்றிதழ்களின் பிரதிகளை வழங்குவதும் இந்த நடமாடும் சேவையின் ஊடாக முன்னெடுக்கப்படவுள்ளது.

அதற்கமைய உடஹேன்தென்ன, இலக்கம் 1, தமிழ் மகா வித்தியாலயம், பரகல ஜனபதத்தில் காலை 9 மணி முதல் நடமாடும் சேவை ஆரம்பமாகவுள்ளதோடு நாளைய தினம் தொலுவ பிரதேச செயலகத்தில் காலை 9 மணி முதல் நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

## எச்சரிக்கை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம்பேசும்போதுதெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இயற்கைப் பேரிடர்களை எதிர்கொள்வதற்கான முன்னாயத்தங்கள் தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் வருடாந்தம் 25 மாவட்டங்களிலும் விழிப்புணர்வு வேலைத்திட்டங்கள்முன்னெடுக்கபடுகின்றன. பேரிடர் ஏற்பட முன்னர் அதனை இனங்காண்பது அத்தியாவசியமானதாகும். அதற்கமைய பேரிடர்கள் ஏற்படக்கூடிய இடங்கள், நிலமைகள் தொடர்பில் மக்களுக்கு விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளது. எனவே இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டால் அதற்கேற்ப செயற்பட வேண்டியது அத்தியாவசியமானதாகும்.

வளிமண்டலவியல் திணைக்களத்துடன் இணைந்து நீர்ப்பாசனத்திணைக்களம் மற்றும் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் என்பவற்றின் ஊடாக மக்களுக்கு சரியான நேரத்தில் அவ்வப்போது தகவல்கள் வழங்கப்படுகின்றன. சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்படுவதற்கு முன்னர் மஞ்சள் எச்சரிக்கை விடுக்கப்படுகிறது. இந்த எச்சரிக்கை ஆயத்தமாவதற்கு வழங்கப்படும் காலமாகும். எனவே சரியான நேரத்தில் ஆபத்தான இடங்களிலிருந்து வெளியேறுவது அத்தியாவசியமானதாகும். அவ்வாறான வெளியேற்றத்தின் ஊடாக மாத்திரமே உயிரிழப்புக்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.

பேரிடர்கள் தொடர்பில் இடர் முகாமைத்து மத்திய நிலையத்தின் 117 என்ற அவசர தொலைபேசி இலக்கத்துக்கு அழைத்து தேவையான சேவைகளை 24 மணித்தியாலங்களும் பெற்றுக்கொள்ள முடியும் - என்றார்.

## ஆளும்தரப்பின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவத்தையடுத்துகாயமடைந்தபச்சிளம் குழந்தை, இரு பெண்கள், நாடாளுமன்ற உறுப்பினரான அசோக் ரன்வல ஆகியோர் கிரிபத்கொடை வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். மேலதிக சிகிச்சைக்காக குறித்த குழந்தை கொழும்பு சிறுவர் வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதுடன், நாடாளுமன்ற உறுப்பினர் மற்றும் இரு பெண்களும் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

வைத்தியசாலையில்சிகிச்சைப்பெற்றுவந்த நாடாளுமன்ற உறுப்பினர் அசோக் ரன்வல கவனயீனமாக வாகனத்தை செலுத்தியமை மற்றும் விபத்தை தவிர்க்கத் தவறியமை, காயமேற்படுத்தியமை ஆகிய குற்றச்சாட்டுகளின் பேரில் நேற்று பிற்பகல் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

இந்நிலையில் வைத்தியசாலைக்கு நேரில் சென்றிருந்த மாளிகாகந்த நீதிவான் சந்தேகநபரான அசோக் ரன்வலவுக்கு தலா 2 இலட்சம் ரூபா பெறுமதியான இரண்டு சரீர பிணைகளில் செல்ல அனுமதி வழங்கினார். மேலும் இந்த வழக்கு டிசெம்பர் 19 மீள விசாரணைக்கு நாள் குறிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் எப்.யு.வுட்லர் தெரிவித்ததாவது:

சபுகஸ்கந்த பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் விபத்துக்குள்ளான மோட்டார் சைக்கிள் செலுத்துநர், கார்சாரதி ஆகியோருக்கு எவ்வித காயங்களும் ஏற்படவில்லை. விசாரணைகளுக்காக மோட்டார் சைக்கிள், கார் மற்றும் ஜீப் வண்டியும் பொலிஸாரால் பொறுப்பேற்கபட்டுள்ளது.

சம்பவத்தின் பின்னர் நாடாளுமன்ற உறுப்பினர்அசோக்ரன்வலவிடம்பொலிஸார், சம்பவம் குறித்து வாக்குமூலம் பெற முற்பட்ட போதும் அவர் வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டமையால் முடியாமல் போனது. எவ்வாறெனினும் சபுகஸ்கந்தபொலிஸார்இவ்விடயம்தொடர்பில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர் என்றார்.

மேலும் காயமடைந்த பச்சிளம் குழந்தையின் தந்தை (லஹிரு) தெரிவிக்கையில், விபத்தில் அடிபட்ட எனது மகளின் தலைபகுதியில் பெரிய வீக்கம் ஏற்பட்டுள்ளது. தாயின் கால் பகுதியில் உள்ள எலும்பு முழுமையாக முறிந்துள்ளது. மனைவியின் மூக்கு பகுதியில் உள்ள எலும்பு உடைந்துள்ளது. இருவருக்கும் சத்திர சிகிச்சை மேற்கொள்ள உள்ளதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர் என்றார்.

## இவ்வளவு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தொடர்ந்து ஏற்பட்ட மண்சரிவு பேரிடரால் மலையகதொடருந்துப்பாதைகள்பெருமளவில் சேதமடைந்துள்ளன. தொடருந்து பாதைகளை விரைவாக சீரமைப்பதற்குரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடருந்துதிணைக்களசேவையாளர்கள், இராணுவத்தினரின் ஒத்துழைப்புடன்; சேதமடைந்துள்ள தொடருந்து பாதைகளைக் கட்டம் கட்டமாகச் சீரமைத்து வருகின்றனர். வெகுவிரைவில்இந்தப்பணிகள்நிறைவடையும் என்று எதிர்பார்க்கிறோம்.

அரசுத்தலைவர்விடுத்தஅறிவிப்புக்கமைய பேரிடரால் பாதிக்கப்பட்டுள்ள அனைவருக்கும் இழப்பீடுவழங்கப்படும். இயற்கைவளங்களை அழித்து குடியிறுப்புக்களை அமைத்தால் அதன் பிரதிபலன் பாரதூரமானதாக அமையும் என்பதற்கு தற்போதைய நிலமை ஒரு எடுத்துக்காட்டாக காணப்படுகிறது.

மலைகள், ஆறுகளை அண்டிய பகுதிகளில் குடியிறுப்புக்களை அமைப்பது குறித்து இனி கடுமையான திட்டங்கள் செயற்படுத்தப்படும். தற்போதைய நிலைமை எதிர்காலத்தில் தோற்றம் பெறாத வகையில் நிலையான தீர்மானங்களை செயற்படுத்த வேண்டும்.

இடர்களால் பொதுமக்கள் பாதிக்கப்பட்டு நெருக்கடிக்குள்ளாகியுள்ளதைகாட்டிலும்எதிர்க் கட்சியினர் நெருக்கடிக்குள்ளாகியுள்ளார்கள். ஊடக சந்திப்புக்களை நடத்திக் கொண்டு குற்றச்சாட்டுக்களை மாத்திரம் முன்வைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

மக்கள் மீது அக்கறை இருக்குமாயின் எதிர்க்கட்சியினர் ஊடகங்களுக்கு மத்தியில் குற்றச்சாட்டுக்களை முன்வைத்துக் கொண்டிருக்காமல் மக்கள் மத்தியில் சென்று அவர்களுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். எதிர்க்கட்சியினர் இந்தளவுக்கு கீழ்த்தரமாக செயற்படுவார்கள் என்று எதிர்பார்க்கவில்லை. இவர்களின் நிலமை கவலைக்குரியது -என்றார்.

## தித்வா....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உயிரிழப்புகள் கண்டி மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன், அங்கு 234பேர் உயிரிழந்துள்ளனர்.

அதற்கு அடுத்தபடியாக பதுளை மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன், அங்கு 90பேர் உயிரிழந்துள்ளனர்

மேலும் நுவரெலியா மாவட்டத்தில் 89 உயிரிழப்புகளும், குருநாகல் மாவட்டத்தில் 61 உயிரிழப்புகளும், புத்தளம் மாவட்டத்தில் 36 உயிரிழப்புகளும், கேகாலை மாவட்டத்தில் 32 உயிரிழப்புகளும், மாத்தளை மாவட்டத்தில் 29 உயிரிழப்புகளும் அதிகளவான மரணங்களாகப் பதிவாகியுள்ளன.

மேலும், அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களில் அதிகளவானோர் கொழும்பு மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளனர்.

கொழும்பு மாவட்டத்தில் 86,147 குடும்பங்களைச் சேர்ந்த 330,443 நபர்கள் அனர்த்தத்தினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் தெரிவித்துள்ளது.

இதற்கு மேலதிகமாக கண்டி மாவட்டத்தில் 80,375 குடும்பங்களைச் சேர்ந்த 2,87,364 நபர்களும், கண்டி மாவட்டத்தில் 54,716 குடும்பங்களைச் சேர்ந்த 171,127 நபர்களும், திருகோணமலை மாவட்டத்தில் 27,234 குடும்பங்களைச் சேர்ந்த 90,140 நபர்களும், குருநாகல் மாவட்டத்தில் 26,474 குடும்பங்களைச் சேர்ந்த 88,899 நபர்களும், மன்னார் மாவட்டத்தில் 23,704 குடும்பங்களைச் சேர்ந்த 77,694 நபர்களும், கேகாலை மாவட்டத்தில் 23,324 குடும்பங்களைச் சேர்ந்த 83,482 நபர்களும், அனுராதபுர மாவட்டத்தில் 22,562 குடும்பங்களைச் சேர்ந்த 74,084 நபர்களும், பதுளைமாவட்டத்தில்22,257குடும்பங்களைச் சேர்ந்த 73,547 நபர்களும், இரத்தினபுரி மாவட்டத்தில் 19,092 குடும்பங்களைச் சேர்ந்த 74,277 நபர்களும் அனர்த்தத்தினால் அதிக பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

இதேவேளை, நாடு முழுவதும் உள்ள 847 பாதுகாப்புமுகாம்களில்26,103குடும்பங்களைச் சேர்ந்த 82,813 நபர்கள் தொடர்ந்தும் தங்கியுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இதில் அதிகளவான பாதுகாப்பு முகாம்கள் கண்டிமாவட்டத்தில்அமைக்கப்பட்டுள்ளதுடன், அங்கு 279 பாதுகாப்பு முகாம்களில் 7,952 குடும்பங்களைச் சேர்ந்த 27,227 நபர்கள் தங்கியுள்ளனர்.

இதற்கு அடுத்தபடியாக நுவரெலியா மாவட்டத்தில் 211 முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளதுடன், அங்கு 6,652 குடும்பங்களைச் சேர்ந்த 20,825 நபர்கள் தங்கியுள்ளனர்.

பதுளை மாவட்டத்தில் 147 பாதுகாப்பு நிலையங்களும், கேகாலையில் 104 பாதுகாப்பு நிலையங்களும் அமைக்கப்பட்டுள்ளதுடன், அவற்றில் முறையே 5,856 குடும்பங்களைச் சேர்ந்த 17,444 நபர்களும் மற்றும் 2,980 குடும்பங்களைச் சேர்ந்த 8,658 நபர்களும் தங்கியுள்ளனர்.

## இழப்பீடுகளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சென்று,நட்டஈட்டு தொகை வழங்குவது தொடர்பில் நிபந்தனைகளை விதித்து வருகிறார். அந்த கீழ்த்தரமான வேலையை செய்ய வேண்டாம் என அரசுத் தலைவரிடம் கேட்டுக்கொள்கிறோமென ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்தார்.

பேரிடர் நிலை தொடர்பில் ஆளும்தரப்பு முன்கூட்டியே அறிந்திருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படும் கருத்துச் சம்பந்தமாக கொழும்பில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஏற்பட்ட வெள்ளப் பேரிடர் மற்றும் சூறாவழிக் காற்று தொடர்பில் நவம்பர் 17 முதல் 27வரை பேரிடர் முகாமைத்துவ மத்திய நிலையம், வளிமண்டலவியல் திணைக்களம். கட்டட ஆராய்ச்சி நிறுவனம், இலங்கை மின்சாரசபை, நீர்ப்பாசன அமைச்சு, நீர் வழங்கல் அமைச்சு, கடற்றொழில் அமைச்சு ஆகியன தொடர்ந்து கூட்டங்களை நடத்தி இருக்கின்றன. அதேபோன்று நிகழ்நிலை ஊடாகவும்கூட்டங்களைநடத்திஇருக்கின்றன.

இந்தக் கூட்டங்களின்போது, அதிகாரிகள் மட்டத்தில் அவர்கள் இது தொடர்பில் எடுத்த தீர்மானங்கள் என்ன? மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் என்ன என்பது தொடர்பில் நாடாளுமன்றமும்தெரிந்துகொள்ளவேண்டும் நாட்டு மக்களும் தெரிந்துகொள்ள வேண்டும். அதனால் இந்தக் காலப் பகுதியில், அவர்கள் இந்த நிறுவனங்களுடன் கலந்துரையாடி மேற்கொண்ட தீர்மானங்கள், இந்தப் பேரிடர் தொடர்பில் அவர்கள் வெளியிட்ட அறிக்கைகள் என அனைத்து விடயங்களின் தவல்களையும் நாட்டு மக்களுக்கு தெளிவுபடு த்துவதற்காக, தகவல் அறியும் சட்டத்தின் கீழ் நாங்கள் கோரி இருக்கிறோம்.

ஏனெனில் இந்தப் பேரிடர் தொடர்பில் எந்த முன்னெச்சரிக்கையும் விடுக்கப்படவில்லை என ஆளும்தரப்பு தொடர்ந்து தெரிவித்து வருகிறது. வளிமண்டவிலயல் திணைக்கள பணிப்பாளர் நாயகம் நவம்பர் 11 முதல் 17 வரை இவ்வாறான பேரிடர் ஒன்று தொடர்பில் தொடர்ந்து எதிர்வுகூறி வந்தார். அதேபோன்று இந்திய காலநிலை மவதான நிலையமும் இலங்கைக்கு இவ்வாறான அனர்த்த நிகழ்வு ஏற்படப்போவதாக தெரிவித்திருந்ததாக இந்திய ஊடகங்களும் தெரிவித்திருந்தன. பி,பி,சி போன்ற சர்வதேச செய்தி நிறுவனங்களும் இதுதொடர்பில் அறிவித்திருந்தன.

இவ்வாறு அறிவிக்கப்பட்டும், ஆளும்தரப்பு

தொடர்ச்சி 6ம் பக்கம்....


JDr
JDR CARE HOME & MEDICALS
மூத்த பிரஜைகளுக்கான பூரண வசதிகளுடனான பராமரிப்பு
FACILITIES
Medical Care
24x7 Nursing Care
Adjustable Hospital Beds
AC / Non AC rooms
Attached Bathroom
Laundry
Physiotherapy
Speech therapy
NG care
BOOK NOW
0701348384
46,Brodie Lane,
Jaffna

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## எச்சரிக்கையின் அர்த்தமென்ன?

சமீபத்தில் இலங்கையைத் தாக்கி பெருமளவு சேதங்களை ஏற்படுத்திய ‘தித்வா’ சூறாவளியின் பிந்தைய சூழலில், ஆளும்தரப்பையும் முக்கிய வானிலை மற்றும் பேரிடர் மேலாண்மை நிறுவனங்களையும் குறித்த விமர்சனங்கள் பல்வேறு தளங்களில் வலுவடைந்துள்ளன.

எதிர்க்கட்சிகளும் சமூக செயற்பாட்டாளர்களும், போதிய எச்சரிக்கைகள் வழங்கப்படாததோடு, ஏற்பட்ட நிலைமைகளுக்கு உரிய மற்றும் துரித பதிலை அளிக்க ஆளும்தரப்புத் தவறிவிட்டதாகக் குற்றஞ்சாட்டுகின்றனர். உயிரிழப்புகளுக்கும் சொத்துச் சேதங்களுக்கும் ஆளும்தரப்பும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளும் பொறுப்பேற்க வேண்டும் என்பது சிலரின் தீவிரக் கோரிக்கை.

இந்தக் குற்றச்சாட்டுகள் ஏன் உருவாகின்றன என்பதைப் புரிந்துகொள்வது அவசியம். நாட்டில் காலா காலமாக வெள்ளங்களும் நிலச்சரிவுகளும் நிகழ்வது வழக்கமாக இருந்தாலும், இந்த முறை ஏற்பட்ட பாதிப்பின் தீவிரம் மக்கள் மனதில் ஆழமான கேள்விகளை எழுப்பியுள்ளது. எச்சரிக்கைகள் வழங்கப்பட்டிருந்தாலும், அவை பொதுமக்களையும் ஆபத்தான பகுதிகளில் வாழும் மக்களையும் எட்டியதா? அந்த எச்சரிக்கைகள் நிலமையின் தீவிரத்தைக் கூறியதா? மக்கள் அவற்றை புரிந்துகொண்டு உரிய நடவடிக்கை எடுக்க வழி காட்டப்பட்டார்களா? என்ற கேள்விகளுக்குத் தெளிவான பதில்கள் இல்லை.

இங்கே மிக முக்கியமான பிரச்சினை ஒன்று வெளிப்படுகிறது. வானிலை முன்னறிவிப்புகளை மக்கள் போதிய முக்கியத்துவத்துடன் எடுத்துக்கொள்வதில்லை. எச்சரிக்கைகள் பலமுறை கொடுக்கப்பட்டாலும் அவை பல சமயங்களில் நிகழ்வதில்லை அல்லது மிகச் சிறிய விளைவுகளில் முடிந்துவிடுகின்றன என்பதே அதற்குக் காரணம். இதன் விளைவாக, எச்சரிக்கைகள் நடப்பதற்கான வாய்ப்புக்களில்லை என்ற பொது மனநிலை உருவாகிறது. இந்த மனநிலை, எச்சரிக்கைகளை மக்கள் அலட்சியப்படுத்த வழிசெய்கிறது.

மேலும், வானிலை அறிவிப்புகளில் பயன்படுத்தப்படும் சொற்கள், எச்சரிக்கை நிலைகள், தொழில்நுட்ப வார்த்தைகள் ஆகியவை பலருக்கும் சரியாகப் புரியவதில்லை. இதனால் எச்சரிக்கை வந்த உடனேயே எடுக்க வேண்டிய நடவடிக்கை என்ன என்பதில் தீவிர குழப்பம் ஏற்படுகிறது.

இதற்கான ஒரே தீர்வு விழிப்புணர்வு மற்றும் பேரிடர் முன் தயாரிப்பை வலுப்படுத்துவதாகும். இந்த விடயத்தில் மக்களுக்கு அறிவூட்டல் ஒரு விருப்பத்தேர்வு அல்ல; அது அபாயக் குறைப்புத் திட்டத்தின் மையக் கூறாகவே அமைய வேண்டும். முக்கிய ஆவணங்களை எங்கே வைத்திருக்க வேண்டும், பாதுகாப்பான வெளியேற்றப் பாதைகள் எவை, வெள்ளம் அல்லது நிலச்சரிவின் ஆரம்ப அறிகுறிகள் எவை, திடீர் அவசர நிலைகளில் தொடர்பு கொள்ள வேண்டிய அதிகாரிகள் யார் என்ற அடிப்படைத் தகவல்கள் ஒவ்வொரு குடும்பத்திற்கும் சென்றடைய வேண்டும்.

இதனோடு, தொடர்பாடல் முறைகளும் மாற்றம் பெற வேண்டியுள்ளது. எல்லோரும் தொலைக்காட்சியைப் பார்ப்பதில்லை; இணையத்தையும் அணுகுவதில்லை. இளையதலைமுறையினர் பெரும்பாலான தகவல்களை சமூக ஊடகங்கள் வழியேப் பெறுகின்றனர். கிராமப்புறங்களில் வாழும் பல குடும்பங்கள் குறுந்தகவல் சேவைகளையே நம்புகின்றனர். எனவே, பல்துறை தொடர்பு முறைகள் ஒலி அறிவிப்புகள், காட்சி எச்சரிக்கைகள், பல மொழிகளில் குறுஞ்செய்திகள், சமூக வானொலி, கோயில் மற்றும் பள்ளிவாசல் ஒலிபெருக்கிகள், அலைபேசி நிறுவனங்கள் வழியாக அனுப்பப்படும் அவசர அறிவிப்புகள் எல்லாம் ஒருங்கிணைக்கப்பட்ட வடிவத்தில் பயன்படுத்தப்பட வேண்டும். எச்சரிக்கைகள் எளிய மொழியில், செயல்பட வேண்டிய படிகளை தெளிவாகக் கூறும் விதமாக வடிவமைக்கப்பட வேண்டும்.

அதேநேரத்தில், கடந்த பேரிடர்களிலிருந்து பாடம் கற்றுக்கொள்வது நிறுவனங்களின் பண்பாட்டில் இடம்பிடிக்க வேண்டும். தரவுகள், அனுபவங்கள், பிந்தைய மதிப்பீடுகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு தேவைப்படும் திருத்தங்கள் செய்யப்படவேண்டும். மேலும், மக்கள் தொடர்பில் தினமும் செயலாற்றும் கிராம நிர்வாகிகள், உள்ளூராட்சி அமைப்புகள், சமூகக் குழுக்கள் ஆகியவை தேசிய பேரிடர் மேலாண்மை அமைப்பின் ஒரு செயல்பாட்டு அங்கமாக மாற்றப்படவேண்டும். அபாயத்திற்கு உள்ளான குடும்பங்களின் பட்டியல், வெளியேற்ற மையங்கள், தன்னார்வக் குழுக்கள், அவசர தொடர்பு எண்கள் ஆகிய அனைத்தும் புதுப்பிக்கப்பட்ட நிலையில் பராமரிக்கப்படவேண்டும்.

இறுதியில், பொறுப்பு ஆளும்தரப்பிற்கு மட்டுமல்லாது பகிர்ந்தளிக்கப்படவேண்டும். பொறுப்பு. அதிகாரிகள் தங்கள் அமைப்புகளையும் பதிலளிப்பு முறைகளையும் வலுப்படுத்த வேண்டும்; பொதுமக்களும் தங்களுக்கு வரும் எச்சரிக்கைகளை கவனமாக எடுத்துக்கொண்டு தங்களுடைய பாதுகாப்பிற்கான தயாரிப்பைப் பெருக்கிக் கொள்ள வேண்டும். இயற்கை பேரிடர்களைத் தடுக்க முடியாவிட்டாலும், அவை ஏற்படுத்தும் அழிவுகளை மிகவும் குறைக்க முடியும். காலநிலை மாற்றங்களால் உலகம் முழுவதும் அபாயங்கள் அதிகரித்து வரும் இந்த காலத்தில், இலங்கை போன்ற சிறிய தீவு நாடுகள் அதிக ஆபத்துக்குள்ளாகின்றன. எனவே, பேரிடரின் பின்னரான நடவடிக்கைகளைப் பேசுவதற்குப் பதில், பேரிடர் முன் செயல்முறைகளை வலுப்படுத்தும் நாடாக நாம் மாற வேண்டிய நேரம் இது.

ஊழல் வழக்கில்

# முன்னாள் அமைச்சருக்கு எதிரான சாட்சிய விசாரணைகள் மார்ச்சில்

முன்னாள் அமைச்சர் பிரியங்கர ஜயரத்ன மீது ஊழல் குற்றச்சாட்டில் இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக் குழு தாக்கல் செய்த வழக்கின் சாட்சி விசாரணையை எதிர்வரும் மார்ச் 9 தொடங்க கொழும்பு மேல் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது. அன்றைய தினம் சாட்சியாளர்களை மன்றிற்கு வருமாறும் அறிவித்தல் விடுத்தது.

இந்த வழக்கு நேற்று இலஞ்ச ஊழல் வழக்குகளை விசாரிக்க உருவாக்கப்பட்டுள்ள கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மொஹம்மட் மிஹால் முன் விசாரணைக்கு வந்தது.

2013 செப்டெம்பர் 21 முதல் ஒக்டோபர் 24 வரையிலான காலத்தில், சிவில் விமான போக்குவரத்து அமைச்சராகப் பணியாற்றியபோது, 494,000 ரூபாவை சிலாபத்தில் உள்ள ஒரு வங்கியில் உள்ள கணக்கிற்கு மாற்ற சிவில் விமான போக்குவரத்து அதிகாரசபை அதிகாரிகளுக்கு அழுத்தம் கொடுத்து தூண்டியதன் மூலம் இலஞ்ச ஒழிப்பு சட்டத்தின் கீழ் ‘ஊழல்‘ எனும் குற்றறத்தை பிரியங்கர ஜயரத்ன செய்துள்ளார் என்று குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

# நோர்வே ரூ. 2 மில். நிதி உதவி

‘தித்வா‘ சூறாவளியினால் ஏற்பட்ட பேரிடரினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கைக்கு நோர்வே சுமார் 2 மில்லியன் டொலர்கள் நிதியுதவியை வழங்கியுள்ளதாக அந்நாட்டின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் அஸ்முன்ட் ஒக்ரஸ்ட் தெரிவித்துள்ளார்.

‘தித்வா‘ சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் சிக்கிப் பல நூற்றுக்கணக்கானோர் பலியாகியிருப்பதுடன், இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் சர்வதேச நாடுகள், அரச சார்பற்ற அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள் எனப் பல்வேறு தரப்பினரும் பல வழிகளிலும் இலங்கைக்கு உதவிகளை வழங்கிவருகின்றனர்.

அந்தவகையில் நோர்வே அரசு இலங்கைக்கு வழங்கிவரும் உதவிகள் தொடர்பில் கருத்துரைத்துள்ள அந்நாட்டின் சர்வதேச அபிவிருத்தி அமைச்சர் அஸ்முன்ட் ஒக்ரஸ்ட், ‘இலங்கையில் தமது வீடுகளையும் வாழ்வாதாரத்தையும் இழந்துள்ள மக்களுக்கு அவசியமான உடனடி உதவிகளை நோர்வே வழங்கிவருகின்றது.

பாதிக்கப்பட்ட மக்களுக்கான இருப்பிடம், உணவு, சுகாதாரம் மற்றும் மீளக்கட்டியெழுப்பல் வசதிகள் என்பன முறையாகச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதும், அதற்குரிய ஒத்துழைப்பை வழங்குவதும் இன்றியமையாததாகும்‘ எனத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறானதொரு பின்னணியில் பாதிக்கப்பட்ட மக்களுக்குரிய உதவி உதவிகளை வழங்கும் நோக்கில் இலங்கையிலுள்ள செஞ்சிலுவைச் சங்கம் மற்றும் ஐக்கிய நாடுகள் அலுவலகம் என்பவற்றுக்கு நோர்வே ஆளும்தரப்பு சுமார் 2 மில்லியன் டொலர்கள் நிதியை நன்கொடையாக வழங்கியிருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும் இவ்வாறான பரந்தளவிலான அனர்த்தங்களின்போது நோர்வே போன்ற நாடுகள் முன்வந்து பாதிக்கப்பட்ட சமூகங்களை மீளக்கட்டியெழுப்புவதற்கு அவசியமான உதவிகளை வழங்கவேண்டியது அவசியம் எனவும் நோர்வே அமைச்சர் அஸ்முன்ட் ஒக்ரஸ்ட் வலியுறுத்தியுள்ளார்.

# சீன மக்கள் நட்புறவுச் சங்கமும் உதவி

பேரிடரினால் பாதிக்கப்பட்டுள்ள இலங்கை மக்களுக்கு அவசியமான உதவிகளை வழங்குவதற்கென வெளிநாடுகளுடனான சீன மக்கள் நட்புறவுச் சங்கத்தினால் 580,000 ஆர்.எம்.பி. நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

‘தித்வா‘ சூறாவளி காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்களில் சிக்கிப் பல நூற்றுக்கணக்கானோர் பலியாகியிருப்பதுடன், இலட்சக்கணக்கானோர் தமது இருப்பிடங்களையும் வாழ்வாதாரத்தையும் இழந்து வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்நிலையில் சர்வதேச நாடுகள், அரச சார்பற்ற அமைப்புக்கள், தனியார் நிறுவனங்கள் எனப் பல்வேறு தரப்பினரும் பல வழிகளிலும் இலங்கைக்கு உதவிகளை வழங்கிவருகின்றனர்.

அதன் ஓரங்கமாக வெளிநாடுகளுடனான சீன மக்கள் நட்புறவுச்சங்கத்தின் தலைவர் யாங் வான்மிங்குக்கும் வெளிவிவகார, வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் விஜித்த ஹேரத்துக்கும் இடையிலான சந்திப்பு நேற்று வெள்ளிக்கிழமை (12) கொழும்பிலுள்ள அயலுறவுத்துறை அமைச்சில் நடைபெற்றது.

இதன்போது நாடு முகங்கொடுத்த பேரனர்த்தத்தை அடுத்து சீன அரசாங்கமும், சீன மக்களும் இலங்கைக்கு வழங்கிய உதவிகளுக்காகவும், வெளிப்படுத்திய உடன்நிற்புக்காகவும் வெளிவிவகார அமைச்சர் தனது நன்றியை வெளிப்படுத்தினார்.

அத்தோடு இலங்கைக்கும், சீனாவுக்கும் இடையில் நீண்டகாலமாக நிலவும் இருதரப்பு நல்லுறவை மேலும் விரிவுபடுத்துவதற்கான நடவடிக்கைகள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

மேலும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசியமான உதவி உதவிகளை வழங்குவதற்கென வெளிநாடுகளுடனான சீன மக்கள் நட்புறவுச் சங்கத்தின் சார்பில் 580,000 ஆர்.எம்.பி நிதியுதவிக்கான காசோலை அதன் தலைவர் யான் வான்மிங்கினால் அமைச்சர் விஜித்த ஹேரத்திடம் வழங்கிவைக்கப்பட்டது.

# இலங்கையை மீளக் கட்டியெழுப்ப இந்தியா ரூ. 10 கோடி நிதி உதவி

‘தித்வா’ சூறாவளியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிம் வழங்குவதற்கான ஆளும்தரப்பின் இலங்கையை மீளக்கட்டியெழுப்பல் நிதியத்துக்கு 100 மில்லியன் ரூபா நன்கொடை வழங்கப்பட்டது.

குறித்த காசோலையை இந்திய உயர் ஆணையரகத்தின் பிரதி உயர் ஆணையர் சத்யன்ஜல் பாண்டே மற்றும் கொழும்பு மேற்கு சர்வதேச முனையம் (பிரைவெட் லிமிடெட்) பிரதான நிறைவேற்று அதிகாரி முனிஸ் கன்வர் ஆகியோரினால் நேற்று அரசுத் தலைவர் அலுவலகத்தில் அரசுத் தலைவரின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்கவிடம் கையளிக்கப்பட்டது.

பேரிடரிற்குப் பின்னர் நாட்டை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான ஆளும்தரப்பு வேலைத்திட்டங்களுக்கு இந்திய ஆளும்தரப்பு வழங்கும் ஆதரவைப் பாராட்டுவதாக அரசுத் தலைவர்யின் செயலாளர் கலாநிதி நந்திக சனத் குமாநாயக்க இதன்போது தெரிவித்தார்.

எதிர்காலத்திலும் இலங்கைக்கு தேவையான உதவிகளை வழங்க இந்திய ஆளும்தரப்பு தயாராக உள்ளதாக இந்திய பிரதி உயராணையர் இங்கு தெரிவித்தார்.

துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சர் அநுர கருணாதிலக, இந்திய தூதரகத்தின் பொருளாதார மற்றும் வர்த்தகப் பிரிவின் பிரதானி தேவிகா லால்,, ஜோன் கீல்ஸ் ஹோல்டிங்ஸ் நிறுவனத்தின் தலைவர் மற்றும் பிரதான நிறைவேற்று அதிகாரி கிருஷான் பாலேந்திர, கொழும்பு மேற்கு சர்வதேச முனையத்தின் பிரதிநிதிகளான சாபிர் ஹாசிம், மற்றும் ஆனந்தன் நாகசைனு ராஜ் ஆகியோர் இதன்போது கலந்துக் கொண்டனர்.

# ஜப்பானிய மருத்தவக் குழு சிலாபத்தில் உதவிப் பணி

புத்தளத்தில் கனமழை மற்றும் வெள்ளப் பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு அவசர மருத்துவ சேவைகளை வழங்குவதற்காக, ஜப்பான் பேரிடர் உதவி வைத்திய நிபுணர் குழு சிலாபம் பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் விசேட கள மருத்துவமனையை நிறுவி நோயாளர்களுக்கான சிகிச்சை சேவைகளை வழங்கிவருகிறது.

மக்களின் நலன் கருதி ஜப்பான் பேரிடர் உதவி வைத்திய நிபுணர் குழு வின் சிகிச்சை சேவைகள் டிசெம்பர் 15 வரை தொடர்ந்து வழங்கப்பட உள்ளது. சுகாதார மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் வைத்தியர் நளிந்த ஜயதிஸ்ஸ பேரிடரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் உயிர்காக்கும் சேவைகளுக்காக, ஜப்பான் பேரிடர் உதவி வைத்திய நிபுணர் குழுவிற்கும் ஜப்பானிய அரசாங்கத்திற்கும் தனது நன்றியைத் தெரிவிக்கும் முகமாக நேற்று காலை கள மருத்துவமனையை நேரில் சென்று பார்வையிட்டார்.

இலங்கைக்கான ஜப்பானிய தூதுவர் அகியோ இசோமாட்டா மற்றும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் இலங்கைக்கான பிரதிநிதி வைத்தியர் இராஜேஷ் சம்பாஜிராவ் பாண்டவ் உள்ளிட்ட அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்து கொண்டனர்.

டிசெம்பர் 4 தொடங்கப்பட்ட இந்த கள மருத்துவமனை காலை 9மணி முதல் பிற்பகல் 7மணி வரை இடைவிடாத சிகிச்சைகளை வழங்கி வருகிறது. இது அனைத்து வசதிகளும் கொண்ட முதல் கட்ட (வீதீஸ்ரீள 1) மருத்துவமனையாகும். தினசரி 100 இற்கும் மேற்பட்ட நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்து வருகிறது.

இந்தப் பயணத்தின்போது ஜப்பான் இலங்கையின் சிறந்த நண்பன் என வலியுறுத்திய அமைச்சர், நாட்டிற்கு ஏற்படும் ஒவ்வொரு இடரிலும் ஜப்பான் உதவிக்கு வருவதை நினைவுகூர்ந்தார். இடைநிறுத்தப்பட்ட சிலாபம் மாவட்ட பொது வைத்தியசாலையின் சிகிச்சை சேவைகளை கட்டம் கட்டமாக மீள ஆரம்பிக்கும் வரை, இந்த கள மருத்துவமனை தொடர்ந்து செயற்பட உள்ளது. இந்த நிபுணர் குழுவில் விசேட வைத்தியர்கள், தாதியர்கள், மருந்தாளர்கள், ஆய்வக நிபுணர்கள், கதிரியக்கவியலாளர்கள் மற்றும் ஒருங்கிணைப்பு அதிகாரிகள் உட்பட 31 சுகாதார நிபுணர்களும், மேலதிகமாக 15 உதவியாளர்களும் உள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# பருவமழை வலுப்பெறுகிறது

வடகீழ் பருவப் பெயர்ச்சி காலநிலை மேலும் வலுப்பெறுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. அதற்கமைய சம்பந்தப்பட்ட சகல துறையினருடனும் கலந்துரையாடி முன்னாயத்த நடவடிக்கைககள் எடுக்கப்பட்டுள்ளதாக அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தின் பணிப்பாளர் நாயகம் சம்பத் கொட்டுவேகொட தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

இந்தியா, பாக்கிஸ்தான், ஐக்கிய அரபு இராச்சியம், சீனா மற்றும் அமெரிக்கா உள்ளிட்ட நாடுகளிலிருந்து விசேட குழுக்கள் நாட்டுக்கு வந்து மீட்பு பணிகளுக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். இவை தவிர மேலும் பல நாடுகளிடமிருந்து உதவிகள் கிடைக்கப் பெறுகின்றன. இந்தியா, துருக்கி, பங்களாதேஷ், இஸ்ரேல், ஜப்பான், ரஷ்யா உள்ளிட்ட நாடுகளிடமிருந்து பெரும் உதவி உதவிகள் கிடைக்கப் பெற்றுள்ளன.

வடகீழ் பருவப் பெயர்ச்சி காலநிலை மேலும் வலுப்பெறுவதாக வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ள நிலையில், இடர் முகாமைத்துவ மத்திய நிலையமானது சம்பந்தப்பட்ட சகல துறையினருடனும்கலந்துரையாடிமுன்னாயத்தநடவடிக்கைககளை முன்னெடுத்துள்ளது. வடக்கு மாகாணத்தில் வழமைக்கு மாறாக அதிகூடிய மழைவீழ்ச்சி பதிவாகக் கூடும் என வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வுகூறியுள்ளது.

அதேபோன்று வடமத்திய, கிழக்கு, மத்திய மற்றும் ஊவா மாகாணங்களில் வழமையை அண்மித்தளவில் மழை வீழ்ச்சி பதிவாகக்கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் மேல் மற்றும் தென் மாகாணங்களில் வழமையை விடக் குறைவான மழை வீழ்ச்சி பதிவாகும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த எதிர்வு கூறல்களுக்கமைய சகல முன்னாயத்த நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

தித்வா புயலின்போது பதிவான அதிகூடிய மழைவீழ்ச்சி காரணமாக மண் ஈரப்பதன் அதிகரித்துள்ளது. நீர்த்தேக்கங்களிலும் நீர்மட்டம் அதிகரித்துள்ளது. எனவே சிறியளவிலான மழை வீழ்ச்சி கூட பாரிய தாக்கங்களை ஏற்படுத்தக் கூடும். எனவே மக்கள் இது குறித்து அவதானத்துடன் செயற்பட வேண்டும். மண் ஈரப்பதன் அதிகரித்துள்ளதால் சிறிய மழை வீழ்ச்சியின் போது கூட மண்சரிவுகள், கற்பாறைப் பிறழ்வுகள் ஏற்படலாம்.

எவ்வாறிருப்பினும் முப்படையினர் உள்ளிட்ட சிவில் பாதுகாப்பு துறையினர்தயார்நிலையிலேயே உள்ளனர். கடந்த 30 ஆண்டுகளாக வடகீழ் பருவ பெயர்ச்சியின் போது பதிவாகிய மழை வீழ்ச்சியின் அளவை அடிப்படையாகக் கொண்டே வளிமண்டலவியல் திணைக் களம் இந்த எதிர்வுகூறலை முன்வைத்துள்ளது. குறிப்பாக டிசெம்பர் மற் றும் ஜனவரியில் காற்றழுத்த தாழ்வு பிரதேசம் காற்றழுத்த மையமா கவோ, சூறாவளியாகவோ வலுப்பெறக் கூடிய நிலமை காணப்படுவ தாகவும் வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது. அவ்வாறான நிலமை ஏற்பட்ட தற்போதுள்ள காலநிலையில் மாற்றங்கள் ஏற்படும். அவை தொடர்பில் அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையம் தொடர்ந்தும் மக்களை தெளிவுபடுத்தும் என்றார்.

# பல்கலைக்கழக சட்டத்தில் ஆளும்தரப்பு வெளிப்படைத் தன்மையின்றி திருத்தம்

## கொண்டுவர முயற்சி என சஜித் குற்றச்சாட்டு

ஆளும்தரப்பு, 1978 ஆம் ஆண்டின் 16 ஆம் இலக்கப் பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் ஜனநாயகமற்ற மற்றும் வெளிப்படைத்தன்மையற்ற வகையில் திருத்தத்தை அறிமுகப்படுத்த முயற்சிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது தொடர்பில் அறிக்கை ஒன்றை விடுத்துள்ள அவர் தெரிவித்துள்ளதாவது:

பல்கலைக்கழக கல்வியாளர்கள், நிர்வாகத்தினர் மற்றும் தொழிற்சங்கங்கள் உட்பட சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினருடனும் முறையான ஆலோசனைகள் இன்றி இத்தகைய ஒரு முக்கியமான மாற்றம் மேற்கொள்ளப்படக்கூடாது. அதற்குப் பதிலாக, முன்மொழியப்பட்ட சீர்திருத்தங்கள் குறித்து எந்தவொரு உத்தியோகபூர்வ உரையாடலும் அல்லது பொதுத் தெளிவும் இன்றி ஆளும்தரப்பு அடுத்த கட்ட நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகிறது.

முன்மொழியப்பட்டுள்ள திருத்தத்தில், பீடாதிபதிகள் மற்றும் பிரிவுகளுக்கான பொறுப்பதிகாரிகள் பல்கலைக்கழக கல்வியாளர்கள் தேர்ந்தெடுக்கும் தற்போதைய முறையை நீக்குவது மற்றும் அந்த அதிகாரத்தை உபவேந்தருக்கோ அல்லது ஆளும் சபையிடமோ மாற்றுவது போன்ற முக்கிய மாற்றங்கள் அடங்கியுள்ளன.

உயர்கல்வித் துறை ஏற்கனவே பதட்டங்களை எதிர்கொண்டுள்ள ஒரு நேரத்தில், பிரிவுகளுக்கான பொறுப்பதிகாரிகளை நியமிக்கும் தன்னிச்சையான அதிகாரத்தை உபவேந்தருக்கு வழங்குவது அல்லது பல்கலைக்கழக சபைக்குள் அதிகாரத்தை மையப்படுத்துவது கடுமையான சிக்கல்களை உருவாக்கலாம்.

மேலும், புதிய திருத்தத்தை நாடாளுமன்றம் அங்கீகரிப்பதற்கு முன்னரே, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பீடாதிபதிகள் மற்றும் பிரிவுகளுக்கான பொறுப்பதிகாரிகளின் நியமனங்களைத் தற்காலிகமாக நிறுத்துமாறு உபவேந்தர்களுக்கு கடிதம் அனுப்பியுள்ளார். இந்த அறிவுறுத்தல் சட்டபூர்வமான அடிப்படை இல்லாதது. ஸ்தாபிக்கப்பட்ட நடைமுறைகள் மற்றும் தற்போதுள்ள சட்டத்துக்கு முரணானது. உபவேந்தர்கள் தற்போது அமுலில் உள்ள சட்டத்துக்கு கட்டுப்பட்டவர்கள்.

இவ்வாறான நடவடிக்கைகள் ஜனநாயக நடைமுறையின் சரிவையும், சர்வாதிகார முடிவெடுக்கும் திசையை நோக்கி நாட்டை வழிநடத்த ஒரு முயற்சியையும் நிரூபிக்கிறது. பல்கலைக்கழகங்கள் சட்டத்தில் மாற்றங்களைச் செய்வதற்கு முன்னர், திருத்தச் செயற்பாட்டை தற்காலிகமாக நிறுத்திவிட்டு, பரந்தளவிலான ஆலோசனைகளில் ஈடுபடுமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம். அதிகாரத்தை மையப்படுத்தும் அல்லது பங்குதாரர்களின் பங்கேற்பை பலவீனப்படுத்தும் மாற்றங்களை அன்றி, ஆதாரம் சார்ந்த, நியாயப்படுத்தக்கூடிய சீர்திருத்தங்கள் மட்டுமே பின்பற்றப்பட வேண்டும்.




## இழப்பீடுகளை ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அது தொடர்பில் தெரிந்திருக்கவில்லை என அமைச்சரவை பேச்சாளர் தெரிவிப்பதாக இருந்தால், அது மிகவும் கவலைக்குரிய விடயம், அத்துடன் வளிமண்மலவியல் திணைக்களம் திற்வா சூறாவழி பேரிடர் என அறிவிக்கவில்லை என அமைச்சர் தெரிவிக்கிறார். இடம்பெறவிருக்கும் பேரிடர் தொடர்பில் இந்தளவு தெரிவிக்கப்பட்டும், அதன் பாரதூரம் தொடர்பில் புரிந்துகொள்ள முடியாதவர்கள் இந்த ஆளும்தரப்பு இருப்பது மிகவும் கவலைக்குரடிய விடயமாகும்.

ஆளும்தரப்பு உண்மையில் பேரிடர் தொடர்பில் தெரிந்திருக்கவில்லை என்றால், இதுதொடர்பில் தேடிப்பார்க்க அரசுத் தலைவர் ஆணைக்குழு அல்லது நாடாளுமன்ற தெரிவுக்குழு அமைக்குமாறு நாங்கள் கேட்கிறோம். அதன்போது தவறு எங்கு இடம்பெற்றிருக்கிறது என்பதை அறிந்துகொள்ளலாம்.

அதேநேரம் தற்போது வளிமண்டலவியல் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தை பாதுகாப்பு அமைச்சில் மறைத்து வைத்துக்கொண்டு, அவரை வெளியில் அனுப்பாமல் இருக்கிறது. காலநிலை தொடர்பான தகவல்களை அரசுத் தலைவர் ஊடகப்பிரிவுஅவரின்குரல்பதிவைபதிவுசெய்து, அதனை ஊடகங்களுக்கு அனுப்புகின்றன. வளிமண்டலவியல்திணைக்களபணிப்பாளர் நாயகம் இரண்டு வாரங்களுக்கு முன்னர் அவ்வாறு இருக்கவில்லை. அவர் அனைத்து ஊடகங்களையும் அழைத்து பகிரங்கமாகவே காலநிலை தொடர்பான தகவல்களை அறிவித்து வந்ததார். தவறு ஒன்று இடம்பெற்றுள்ளதாலே பணிப்பாளர் நாயகத்தை வெளியில் அனுப்பாமல் மறைத்து வைத்துக்கொண்டிருக்கின்றனர்.

ஆளும்தரப்பு தனது தவறை மறைப்பதற்கு தொடர்ந்தும் பொய் சொல்லிக்கொண்டிருக்காமல், ஏற்பட்ட தவறை ஏற்றுக்கொண்டு, அடுத்த கட்ட நடவடிக்கைகளுக்கு செல்ல வேண்டும். அவ்வாறு இல்லாமல் ஆளும்தரப்பு தனது தவறை மறைத்து, மக்களின் எதிர்ப்பை சமாலித்துக்கொள்வதற்காக அரசுத் தலைவர் பாதிக்கப்பட்டவர்களுக்குநட்டஈடுவழங்குவதாக பாரிய தொகையை அறிவித்துக்கொண்டு சென்றார். அரசுத்தலைவர் நாடாளுமன்றத்தில் தெரிவித்த பிரகாரம் பாதிக்கப்பட்டவர்களுக்கு நட்டஈட்டு தொகையை வழங்க வேண்டும் என்றே நாங்கள் அரசாங்கத்தை வற்புறுத்தி வருகிறோம். ஏனெனில் அரசுத் தலைவர் தற்போது மாவட்ட அபிவிருத்தி கூட்டங்களுக்கு சென்று, தற்போது அந்த நட்டஈட்டு தொகை வழங்குவது தொடர்பில் நிபந்தனைகளை விதித்து வருகிறார். அந்த கீழ்த்தரமான வேலையை செய்ய வேண்டாம் என அரசுத் தலைவரிடம் தெரிவித்துக்கொள்கிறோம் -என்றார்.

**காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு**

**076 3983858**

**மின்னஞ்சல் முகவரி:**
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# பேரிடர் நிலை குறித்து 8 நாள்களில் 25 சிவப்பு எச்சரிக்கைகள் விடப்பட்டன

## வானிலை ஆய்வாளர்கள் சங்கம் அறிவிப்பு

சூறாவளிபேரிடர்தொடர்பானமுறைமைக்கு அமைய மூன்று மணித்தியாலத்துக்கு ஒருமுறை புதிய தரவுகளை உள்ளடக்கிய வகையில் 2025.11.23 முதல் 2025.11.30 வரை 25 சிவப்பு எச்சரிக்கை அறிவுறுத்தல்கள் புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன.

தித்வா சூறாவளி உருவாக்குவதற்கு முன்னர் இருந்த வழிமுறைக்கு அமைய உரிய நிறுவனத்தினருக்கும், பொதுமக்களுக்கும் வளிமண்டளவியல் திணைக்களம் உரிய முன்னறிவித்தலை விடுத்துள்ளதென இலங்கை வானிலை ஆய்வாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இந்திய காலநிலை திணைக்களம் நவம்பர் 13 அல்லது அத்தினத்தை அண்மித்த காலப்பகுதியில் தித்வா சூறாவளியின் ஆரம்பக்கட்ட நிலைமை குறித்து எவ்வித அறிவுறுத்தல்களையும் விடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டும் முற்றிலும் பொய்யானது. சூறாவளி தொடர்பில் இரண்டு வாரங்களுக்கு முன்னரே அறிவிக்கும் தொழில்நுட்பம் உலகில் எந்த நாடுகளிடமும் இல்லை என்றும் அச்சங்கம் குறிப்பிட்டுள்ளது.

சூறாவளியின் தொடக்கம் தொடர்பில் பிராந்திய சிறப்பு வானிலை மையம் 2025.11.27 அன்று பகல் 2.30 மணிக்கு அறிக்கை வெளியிட்டவுடன், அன்றைய தினமே மாலை 05 மணிக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அதனை உத்தியோகபூர்வமாக அறிவித்ததெனவும் அச்சங்கம் சுட்டிக்காட்டியுள்ளது.

தித்வா சூறாவளி தொடர்பில் முன்வைக்கப்படும் குற்றச்சாட்டுக்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்களை தெளிவுபடுத்தி இலங்கை வானிலை ஆராய்ச்சியாளர்கள் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

இலங்கையில் நிலவும் சீரற்ற காலநிலைக்கு மத்தியில் வளிமண்டலவியல் திணைக்களத்தின் செயற்பாடுகள் தொடர்பில் தவறான தகவல்கள் மற்றும் கருத்துக்கள் வெளியாகுவதை அவதானிக்க முடிகிறது. காலநிலை மற்றும் வானிலை தொடர்பில் முன்கூட்டியதாக அறிவுறுத்தல்களை வழங்கி பொதுமக்களை பாதுகாக்க வேண்டிய பொறுப்பு வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு உண்டு. ஆகவே திட்வா புயல் குறித்து எமது திணைக்களத்தால் விடுக்கப்பட்ட முன்னறிவிப்பு குறித்து மக்களுக்கு விடயங்களை தெளிவுபடுத்த வேண்டும்.

நீண்டகால தரவுகளுக்கு அமைய நவம்பர் மாத காலப்பகுதியில் வங்காள விரிகுடா கடற்பகுதியில் சூறாவளிக்கான அனர்த்த நிலை அதிகளவில் காணப்படும். இக்காலப்பகுதியில் குறைவான அழுத்தம் உள்ள பகுதிகளில் எழும் கடும் காற்றழுத்தத்துக்கு 'தித்வா மற்றும் சென்யார்' என்று பெயரிடப்பட்டது. தித்வா புயல் தாக்கத்தால் இலங்கைக்கு ஏற்பட்ட உயிர்சேதம் மற்றும் பொருட்சேதத்தை இன்றளவில் மதிப்பிட முடியாத நிலைமை காணப்படுகிறது.

தித்வா புயல் பல்வேறு காரணிகளால் விசேடமாக கருதப்படுகிறது. இந்த காற்றானது 12 மணித்தியாலத்துக்கும் குறைவான காலப்பகுதிக்குள் குறைவான மட்டத்தில் இருந்து சூறாவளியாக மாற்றமடையும். பூகோள வெப்பமாதல் உயர்வடைவதால் ஏற்படும் காலநிலை மாற்றத்தால் உலகில் பல்வேறு கடற்பரப்பில் காற்றானது சடுதியாக சூறாவளியாக மாற்றமடையும் தன்மை காணப்படுகிறது.

உலக காலநிலை சங்கம் மற்றும் ஆசிய பசிபிக் பொருளாதாரம் மற்றும் சமூக ஆணைக்குழு தென்னிந்திய கடற்பரப்பில் ஏற்படும் அச்சுறுத்தலான நிலைமை குறித்து தொடர்ச்சியாக ஆராய்ந்து இந்த சூறாவளி குறைவான மட்டத்தில் தோற்றம் பெற்ற நாளில் இருந்து தாக்கத்துக்கு உள்ளாக கூடிய நாடுகளுடன் நெருக்கமாக செற்பட்டு தரவு மற்றும் தகவல்களை பரிமாற்றிக் கொண்டுள்ளது.

வளிமண்டலவியல் திணைக்களத்தால் வெளியிடப்படும் வானிலை மற்றும் காலநிலை தொடர்பான அறிவுறுத்தல்கள் சர்வதேச தரத்துக்கமைவானதாகும். திட்வா சூறாவளி உருவாகும் என்று வளிமண்டலவியல் திணைக்களம் நவம்பர் 23 அடையாளப்படுத்தியுள்ளது. மீனவர்கள் மற்றும் கடற்றொழிலாளர்களை இலக்காகக் கொண்டு நவம்பர் 25 முன்னெச்சரிக்கை அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தொடக்கத்தில் விடுக்கப்பட்ட அறிவுறுத்தலை அடிப்படையாகக் கொண்டு 2025.11.25 அன்று காலை 10 மணியளவில் தீவை அண்மித்த பகுதி அச்சுறுத்தலான நிலையில் இருப்பதாக அறிவுறுத்தப்பட்டுள்ளது. அதன்பின்னர் அன்றைய தினமே மாலை 03.45 மணியளவில் தீவுக்கு அப்பாற்பட்ட அச்சுறுத்தலான காலநிலை தீவுக்குள் பிரவேசிக்கும் நிலை காணப்பட்டுள்ளது.

தீவின் கிழக்கு, ஊவா, மத்திய மாகாணம் மற்றும் பொலன்னறுவை மாவட்டம் ஆகிய பகுதிகளில் 150 மில்லி மீற்றரில் கனத்த மழை பெய்யும் என்று குறிப்பிடப்பட்டு 'சிவப்பு' நிறத்திலான 'முன்னெச்சரிக்கை' அறிவித்தல் விடுக்கப்பட்டுள்ளது. இது 'தித்வா' கட்டமைப்பின் ஆரம்ப நிலைக்காக விடுக்கப்பட்ட முதலாவது 'சிவப்பு முன்னெச்சரிக்கை' அறிவுறுத்தலாம். அன்றைய தினம் இரவு 10.30 மணியளவில் இந்த சிவப்பு நிற எச்சரிக்கை நாட்டின் நிலப்பகுதி மற்றும் கடற்பகுதியை வரையறுத்ததாக புதுப்பிக்கப்பட்டது.

நவம்பர் 26 முதல், அதுவரையில் வெளியிடப்பட்ட முன்னெச்சரிக்கை அறிவுறுத்தல்கள், புதிய தரவுகளுடன் புதுப்பிக்கப்பட்டன. வளிமண்டலவியல் திணைக்களம் இவ்வாறான சந்தர்ப்பங்களில் செயற்படுத்தப்படும் (எஸ்.ஓ.பி) முறைமைக்கு அமைவாக செயற்பட்டுள்ளது.

நவம்பர் 26 அன்று நாட்டின் நிலப்பகுதி, தீவு மற்றும் தீவை சுற்றிய கடற்பரப்பை வரையறுத்து காலை 10.30 மணிக்கும், இரவு 10.30 மணிக்கும் தரவுகளை புதுப்பித்து அறிவித்தல்கள் விடுக்கப்பட்டுள்ளன. காற்றின் வேகம் உயர்வடைந்து நாட்டின் கனத்த மழை மற்றும் பலத்த காற்று தொடர்ச்சியாக வீசக்கூடும் என்று தொடர்ச்சியாக அறிவுறுத்தப்பட்டுள்ளது.

நவம்பர் 26 இலிருந்து மறு அறிவித்தல் விடுக்கும் வரையில் நாட்டின் ஆழ்கடல் மற்றும் கடல்பரப்புக்கு செல்ல வேண்டாம் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சாதாரண நிலைமையின் கீழ் வளிமண்டலவியல் திணைக்களம் பிரதேச கண்காணிப்பு மத்திய நிலையங்கள் ஊடாக மூன்று மணித்தியாலங்களுக்கு ஒருமுறை காலநிலை தொடர்பான தகவல்களை பெற்றுக்கொள்ளும் இருப்பினும் நவம்பர் 26 காலை 10.30 மணி முதல் நவம்பர் 29 ஆம் திகதிவரையின் சீரற்ற காலநிலை தொடர்பில் காலி, அம்பாந்தோட்டை, பொத்துவில், திருகோணமலை மற்றும் யாழ்ப்பாணம் ஆகிய பகுதிகளில் உள்ள ஆராய்ச்சி மத்திய நிலையங்களில் இருந்து மணித்தியாலத்துக்குமணித்தியாலம் தரவுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

நவம்பர் 27 காலை 08.30 மணிக்கு 200 மி.மீற்றருக்கும் அதிகமான கனத்த மழை பெய்யக்கூடும் என்று முழு நாட்டையும் உள்ளடக்கி அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் மாலை 05 மணிக்கு டித்வா சூறாவளிக்கான முன்னெச்சரிக்கை அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. அதேபோல் நவம்பர் 27 அன்று புதிய தரவு மற்றும் தகவல்கள் தொடர்பில் உரிய தரப்பினருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

சூறாவளி பேரிடர் தொடர்பான முறைமைக்கு அமைய மூன்று மணித்தியாலத்துக்கு ஒருமுறை புதிய தரவுகளை உள்ளடக்கிய வகையில் 2025.11.23 முதல் 2025.11.30 வரை 25 சிவப்பு எச்சரிக்கைகள் அறிவுறுத்தல்கள் புதுப்பிக்கப்பட்டு வெளியிடப்பட்டுள்ளன. சூறாவளி தாக்கத்தின் பின்னர் போலியான தகவல்கள், நிச்சயமற்ற அறிவுறுத்தல்களை சுட்டிக்காட்டி வளிமண்டலவியல் திணைக்களம் மற்றும் காலநிலை ஆய்வாளர்கள் மேற்கொண்ட சகல நடவடிக்கைகள் தொடர்பில் எவ்வித அறிவிப்புக்களுமில்லாமல் சமூக ஊடகங்கள் வாயிலாக குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டன.

'பி.பி.சி ஊடகம், நவம்பர் 25 500 மி.மீ மழைபெய்யக்கூடும் என்று எதிர்பார்க்கப்பட்ட போதும் 150 மி.மீ என்றே வளிமண்டலவியல் திணைக்களம் குறிப்பிட்டது' என்ற செய்தியை அடிப்படையாகக் கொண்டு ' இந்திய காலநிலை திணைக்களம் தித்வா பற்றி 13 ஆம் திகதி முதல் அறிவுறுத்தியது' என்று செய்திகள் வெளியாகின. அந்த நாட்களில் வளிமண்டலவியல் திணைக்களம் பல நாட்களுக்கான மழை வீழ்ச்சியை ஒன்றிணைத்தே அறிவுறுத்தல்களை விடுத்திருந்தது.

இந்திய காலநிலை திணைக்களம் நவம்பர் 13 அல்லது அத்தினத்தை அண்மித்த காலப்பகுதியில் தித்வா சூறாவளியின் ஆரம்பக்கட்ட நிலைமை குறித்து எவ்வித அறிவுறுத்தல்களையும் விடுக்கவில்லை. இந்த குற்றச்சாட்டும் முற்றிலும் பொய்யானது. சூறாவளி தொடர்பில் இரண்டு வாரங்களுக்கு முன்னரே அறிவிக்கும் தொழில்நுட்பம் உலகில் எந்த நாடுகளிடமும் இல்லை.

பிராந்திய சிறப்பு வானிலை மையம் இந்த ஆரம்ப கட்டமைப்பு நிலை தொடர்பில் 2025.11.23 பிற்பகல் 02.30 மணிக்கு உத்தியோகபூர்வமாக அறிவித்தல் விடுத்தது. அந்த தரவு மற்றும் தகவல்கள் தேசிய மற்றும் பூகோள தரவுகளுடன் மேலும் உறுதிப்படுத்தப்பட்டதன் பின்னர் அன்றைய தினம் மாலை 4 மணிக்கு வளிமண்டலவியல் திணைக்களத்துக்கு உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

சூறாவளியின் ஆரம்பம் தொடர்பில் பிராந்திய சிறப்பு வானிலை மையம் 2025.11.27 ஆம் திகதியன்று பகல் 02.30 மணிக்கு அறிக்கை வெளியிட்டவுடன், அன்றைய தினமே மாலை 05 மணிக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அதனை உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

தித்வா சூறாவளி உருவாக்குவதற்கு முன்னர் இருந்து (நீநூணை) வழிமுறைக்கு அமைய உரிய நிறுவனத்தினருக்கும், பொதுமக்களுக்கும் வளிமண்டளவியல் திணைக்களம் உரிய முன்னறிவித்தலை விடுத்துள்ளது. இதனால் தான் மீனவர்கள் கடலுக்கு செல்லவில்லை. காலநிலை மாற்றத்துக்கு அமைய காலநிலை மற்றும் வானிலை அறிவுறுத்தல்களை பெற்றுக்கொள்ளும் வழிமுறைகளை புதுப்பிக்க வேண்டும் என்றுள்ளது.

# கண்டி மாவட்டத்திலேயே அதிகளவில் வீடுகள் சேதம்

சீரற்ற வானிலையால் சேதமடைந்த வீடுகளில், அதிகளவான வீட்டுச் சேதங்கள் கண்டி மாவட்டத்திலேயே பதிவாகியுள்ளதாக இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தெரிவித்துள்ளது.

இந்த இடரினால் இதுவரை 5,713 வீடுகள் முழுமையாக சேதமடைந்துள்ளதோடு, பகுதியளவில் சேதமடைந்துள்ள வீடுகளின் எண்ணிக்கை 1,04, 805 ஆக உயர்வடைந்துள்ளது.

கண்டி மாவட்டத்தில் 1,568 வீடுகள் முழுமையாக அழிவடைந்துள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்துடன், அந்த மாவட்டத்தில் 14,111 வீடுகள் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

இரண்டாவதாக நுவரெலியா மாவட்டத்தில் அதிகளவான வீட்டுச் சேதங்கள் பதிவாகியுள்ளதுடன், அந்த மாவட்டத்தில் 767 வீடுகள் முழுமையாகவும், மேலும் 3,742 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளன.

மூன்றாவதாக அதிகளவான வீட்டுச் சேதங்கள் புத்தளம் மாவட்டத்தில் பதிவாகியுள்ளதுடன், அந்த மாவட்டத்தில் 627 வீடுகள் முழுமையாகவும், 20,813 வீடுகள் பகுதியளவும் சேதமடைந்துள்ளதாக அனர்த்த முகாமைத்துவ நிலையம் வெளியிட்டுள்ள அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், முறையே குருநாகல் மாவட்டத்தில் 594 வீடுகளும், பதுளை மாவட்டத்தில் 578 வீடுகளும், கேகாலை மாவட்டத்தில் 317 வீடுகளும், அனுராதபுர மாவட்டத்தில் 234 வீடுகளும், பொலன்னறுவை மாவட்டத்தில் 225 வீடுகளும் இந்த பேரிடரினால் முழுமையாக அழிவடைந்துள்ளன.



காலைக்கதிர் Kalaikkathir

# இணையவழி மோசடி நபர் கைது

இணையதளம் மூலம் பணம் சம்பாதிக்க முடியும் எனக் கூறி டெலிகிராம் சமூகவலைத்தளம் ஊடாக 68 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பணத்தை மோசடி செய்த சந்தேகநபர் குற்றப்புலனாய்வு பிரிவின் வடமேல் மாகாண கணினி குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

இணையத்தளம் வாயிலாக பணம் சம்பாதிக்க முடியும் என தெரிவித்து இடம்பெறும் பண மோசடி தொடர்பில் குற்றப்புலனாய்வு பிரிவின் கணினிக் குற்றப்புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த முறைப்பாட்டுக்கமைய விசாரணைகளை முன்னெடுத்திருந்த அதிகாரிகள் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபரை கைது செய்துள்ளனர். மேற்படி சந்தேகநபர் டெலிகிராம் சமூகவலைத்தளத்தின் ஊடாக பண மோசடியில் ஈடுபட்டுள்ளமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இணையத்தளம் வாயிலாக பணம் சம்பாதிக்கமுடியும் என தெரிவித்து வங்கி கணக்கொன்றில் பணத்தை வைப்பிடுமாறு கூறி, குறித்த பயணத்தை மோசடி செய்துள்ளார். அதற்கமைய முறைப்பாட்டாளர் இடமிருந்து சுமார் 68 இலட்சத்து 60 ஆயிரம் ரூபா பணத்தை மோசடி செய்துள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

குறித்த தொகையிலிருந்து 5 இலட்சம் ரூபா பணத்தை சந்தேகநபர் தனது வங்கி கணக்கிற்கு வரவு வைத்த நிலையில் வடமேல் மாகாண கணினி குற்றப்புலனாய்வு பிரிவினர் சந்தேகநபரை அடையாளம் கண்டு நேற்று முன்தினம் வியாழக்கிழமை கைது செய்துள்ளனர்.

31 வயதுடைய வெலிப்பன்ன பகுதியை சேர்ந்த நபர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார். மேலும் சம்பவம் தொடர்பில் வடமேல் மாகாண கணினி குற்றப்புலனாய்வு பிரிவு மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளன.

## 14 மாவட்டங்களில் மண்சரிவு அபாயம்

இலங்கையில் மண்சரிவு அபாயமுள்ள 14 மாவட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இந்த மாவட்டங்கள் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 30 சதவீத்தையும், மொத்த சனத்தொகையில் 34 சதவீதத்தையும் கொண்டுள்ளன. எனவே மண்சரிவு எச்சரிக்கை விடுக்கப்படும் பட்சத்தில் துரிதமாக அவ்விடங்களிலிருந்து வெளியேற மக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பணிப்பாளர் வசந்த சேனாதீர தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அரச தகவல் திணைக்களத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம்பெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

மண்சரிவு அபாயமுள்ள 14 மாவட்டங்கள் இனங்காணப்பட்டுள்ளன. இந்த மாவட்டங்கள் நாட்டின் மொத்த நிலப்பரப்பில் 30 சதவீதமானவையாகும். அத்தோடு மொத்த சனத்தொகையில் 30 சதவீதத்தை இந்த மாவட்டங்கள் கொண்டுள்ளன. கடந்த நவம்பர் 20ஆம் திகதி முதல் இதுவரையில் 2710 இடங்களை ஆய்வு செய்யுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. அவற்றில் 589 இடங்கள் ஆய்வு செய்யப்பட்டுள்ளன.

இதேவேளை தித்வா புயலின் பின்னர் நிலங்களில் வெடிப்புக்கள் ஏற்படுதல் உள்ளிட்ட 736 சம்பவங்கள் பதிவாகியுள்ளன. மண்மேடு சரிந்து விழுதல் 482, கற்பாறை பிளவு 42 என்பன பதிவாகியுள்ளன. இவை தவிர நிலங்கள் தாழிறங்குதல், விரிசல்கள் ஏற்படல் என்பனவும் பதிவாகியுள்ளன.

இந்நிலையில் தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனத்தின் பல குழுக்கள் ஏற்கனவே மண்சரிவுகள் பதிவாகியுள்ள இடங்களில் தொடர்ச்சியான ஆய்வுகளை முன்னெடுத்துள்ளன.

100 மீற்றருக்கும் அதிக தூரத்துக்கு மண்சரிவு ஏற்பட்டுள்ள 1200 இடங்கள் செய்மதிப்படங்கள் ஊடாக அடையாளங் காணப்பட்டுள்ளன. வீடுகளுக்கு சேதங்கள் ஏற்படாமல் 919 மண்சரிவுகளும், வீடுகளுக்கு சேதங்கள் ஏற்படுத்திய 322 மண்சரிவுகளும் பதிவாகியுள்ளன. 1291 வீடுகள் மண்சரிவுகளில் முற்றாக சிக்கியுள்ளன. இந்த எண்ணிக்கைகளில் மாற்றங்கள் ஏற்படக் கூடும். மண்சரிவுகள் ஏற்படக் கூடிய 15 000 இடங்கள் இனங்காணப்பட்டு அவை தொடர்பில் மக்களுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவை தவிர சட்ட விரோத கட்டடங்கள், எமக்கு அறிவிக்கப்படாத பல இடங்கள் கூட மண்சரிவு அபாய எச்சரிக்கை மிக்கவையாக இருக்கலாம். கடுகன்னாவை பிரதேசத்தில் மண்சரிவு ஏற்பட்ட இடம் தொடர்பில் 2016ஆம் ஆண்டிலேயே எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. எனவே எச்சரிக்கை விடுக்கப்படும் பிரதேசங்களில் எக்காரணத்துக்காகவும் கட்டடங்களை நிர்மாணிக்க வேண்டாம் என மக்களைக் கேட்டுக் கொள்கின்றோம்.

இம்முறை மண்சரிவுகளாலேயே அதிக உயிரிழப்புக்கள் பதிவாகியுள்ளன. எனவே மண்சரிவு தொடர்பில் வழங்கப்படும் முன்னெச்சரிக்கைகளை அவதானித்து அதிகூடிய மழைவீழ்ச்சிகளின் போது பாதுகாப்பான இடங்களுக்கு செல்லுமாறும் மக்களை அறிவுறுத்துகின்றோம் என்றார்.

## 6 மாகாணங்களில் மழை தொடரும்

வடக்கு, வடமத்திய, கிழக்கு, ஊவா, மத்திய மற்றும் வடமேல் மாகாணங்களில் தொடர்ந்தும் மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுவதாக இலங்கைவளிமண்டலவியல்திணைக்களம்எதிர்வு கூறியுள்ளது. நாட்டின் ஏனைய பிரதேசங்களில் பல இடங்களில் பிற்பகல் 1 மணிக்குப் பின்னர் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது. இந்தப் பிரதேசங்களில் சில இடங்களில் 50 மி.மீக்கும் அதிகமான ஓரளவு பலத்த மழைவீழ்ச்சி எதிர்பார்க்கப்படுவதாகவும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

மத்திய மலைநாட்டின் கிழக்கு சரிவுப் பகுதிகளிலும் வடக்கு, வடமத்திய மற்றும் வடமேல் மாகாணங்களிலும் திருகோணமலை, ஹம்பாந்தோட்டை மற்றும் மொனராகலை மாவட்டங்களிலும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 30-40 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் ஓரளவு பலத்த காற்று வீசக் கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் சில இடங்களில் அதிகாலை வேளையில் பனிமூட்டமான நிலை காணப்படும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப் பிரதேசங்களில் தற்காலிகமாக வீசக் கூடிய பலத்த காற்று மற்றும் மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைத்துக்கொள்ள தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ளுமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்படுகின்றார்கள்.

## இந்திய 'ட்ரோலர்' ஆக்கிரமிப்பை எதிர்த்து மீனவர்கள் போராட்டம்



இலங்கைக் கடற்பரப்பில் இந்திய மீனவர்களின் அத்துமீறலை, வளக் கொள்ளையைக் கட்டுப்படுத்தக் கோரி நேற்று யாழ்ப்பாணத்தில் மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

யாழ். நகரத்திலுள்ள பண்ணைப் பகுதியில் அமைந்துள்ள கடற்றொழில் நீரியல் வளத்துறைத் திணைக்களத்தின் முன்பாக ஒன்றுகூடிய அவர்கள் இந்திய மீனவர்களின் ஆக்கிரமிப்பைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கும்படி வலியுறுத்தினர்.

பின்னர் அங்கிருந்து பேரணியாகப் புறப்பட்ட அவர்கள் யாழ். மாவட்டச் செயலகம் வரை சென்று தமது கோரிக்கைகள் அடங்கிய மனு ஒன்றை மாவட்டச் செயலரிடம் கையளித்தனர்.

இந்திய துணைத் தூதரம், வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகம், கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களம் ஆதியவற்றிலும் மீனவர்களின் கோரிக்கை மனு கையளிக்கப்பட்டது.




### பகிடிவதைக் குற்றச்சாட்டில் கைதான

## யாழ். பல்கலைக மாணவர்கள் 19 பேருக்கும் நேற்றுப் பிணை

பகிடிவதை புரிந்த குற்றச்சாட்டில் கைதாகி நீதிமன்றத்தால் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட சிங்கள மாணவர்கள் 19 பேருக்கும் நேற்றுப் பிணை வழங்கப்பட்டது.

பல்கலைக்கழகத்துக்கு வெளியே உள்ள வீடொன்றுக்குக் முதல்வருட மாணவர்களை அழைத்துச் சென்று தாக்கி பகிடிவதையில் ஈடுபடுத்தப்பட்டார்கள் என்று இவர்கள் மீது குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு வந்தபோது மேலதிக நீதிவான், சந்தேகநபர்கள் 19 பேரையும் தலா ஒரு இலட்சம் ரூபா ஆள் பிணையில் விடுவிக்க உத்தரவிட்டார். 2026 ஜனவரி 24 வழக்கு தவணையிடப்பட்டுள்ளது.

## கிணற்றில் வீழ்ந்து பெண் உயிரிழப்பு

யாழ்ப்பாணம் - அனலைதீவு பகுதியில் நீர் நிறைந்த கிணற்றில் தவறி வீழ்ந்து பெண் ஒருவர் உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தத் துயரச் சம்பவம் நேற்று இடம்பெற்றுள்ளது. அனலைதீவு 5 ஆம் வட்டாரத்தில் வசிக்கும் சுப்பையா நளினி (வயது 56) என்பவரே உயிரிழந்துள்ளார் என்று ஊர்காவற்றுறைப் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடரும் பெய்துவரும் கனமழை காரணமாக அனலைதீவில் நீர்நிலைகள் நிரம்பியுள்ளன. இதனாலேயே நளினி தவறி வீழ்ந்து உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்படுகின்றது. சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை ஊர்காவற்றுறை பொலிஸார் மேற்கொண்டுள்ளனர்.

# உங்கள் கனவை நனவாக்க ...!

## NVQ Level 3 & 4 Courses

புதிய பிரிவுகள் ஆரம்பம் 20.04.2025

கற்கும் போதே தொழில் ஆற்றக் கூடிய வாய்ப்பு



- CARE GIVER COURSE (பராமரிப்பாளர் பயிற்சி)
- NURSE ASSISTANT COURSE (தாதிய உதவியாளர் பயிற்சி)

கற்கைநெறி மொழி:ஆங்கிலம்/தமிழ்
இந்த கற்கைநெறி முடிவடைந்தவுடன் 3 மாதங்கள் பயிற்சி வழங்கப்படும்

தகுதி:
- வயது 16 அல்லது அதற்கு மேற்பட்டவர்கள்
- ஆங்கிலத்தில் அடிப்படை அறிவு
- GCE O/L இல் குறைந்தது 05 பாடங்களில் தேர்ச்சி

JDR HEALTH CARE (PVT) LTD
JDR PARAMEDICAL ACADEMY

46, Brodie Lane , Jaffna.
தொடர்பு:070 7070 722





இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.12.2025இல் வெளியிடப்பெற்றது